தாம்பரம் நகராட்சியில் குடிநீர் மேல் நிலைத் தொட்டி கட்டும் பணி.

67— (*வினா எண் 9230) திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாம்பரம் நகராட்சியில் 3½ கோடி ரூபாய் செலவில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டும் பணிகள் எப்பொழுது துவக்கப் படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் நகராட்சியின் தற்போதைய மக்கட்தொகையைக் கருத்தில் கொண்டு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் முடிவடைந்தவுடன் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வாரியம் மற்றும் அரசின் அனுமதியுடன் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் முடிவடைவதற்குப் பல ஆண்டுகள் ஆகும் போல் தோன்றுகிறது. இதற்கிடையில் தாம்பரம் மறைமலை நகருக்கு அருகில் உள்ள பகுதியில் இப்போதுள்ள வீடுகளுக்குப் போக மிச்சம் உள்ள நீரை, இடைகாலத்தில், இந்த வறட்சி நேரத்தில், பயன்படுத்திக் கொள்ள, அரசு தாம்பரம் நகரத்திற்கு அனுமதி வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தற்போதைய திட்டத்திற்கு தாம்பரம் நகராட்சி இப்போது தான் ஆய்வுத் தொகை செலுத்தியிருக்கிறது. புதிய திட்டம் ஒன்றினை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்புமானால் அதைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

கலைவாணர் வாழ்க்கை வரலாறு.

68—(*வினா எண் 7241) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலைவாணர் வாழ்க்கை வரலாற்றைப் புத்தகமாக வெளியிட அரசு முடிவு செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைவாணர் பற்றிய நூல்வெளியீட்டுக்கு இயல் இசை நாடக மன்றம் மானிய உதவி வழங்கி நூல் வெளியிடப்பட்டுள்ளது.

1987 மார்ச் 5]

(முற்பகல் 10-20)

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இந்தக் கலைவாணர் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் யாரால் எழுதப்பட்டது? கலைவாணரோடு நெருங்கிப் பழகி, பத்து வருடங்களுக்கு மேல் அவர்களிடம் உதவியாளராக இருந்த திரு. இராமதாஸ் போன்றவர்களிடம் விவரங்கள் கேட்டு அந்தப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறதா? தமிழக அரசின் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் நீண்ட நாட்கள் கலைவாணரோடு கூடவே இருந்தவர்கள். ஆகவே, புரட்சித் தலைவர் அவர்களுக்கு அவரைப் பற்றிய விவரங்கள் நன்றாகத் தெரியும். அவர்களைக் கேட்டு இந்தப் புத்தகம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா என்கின்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, திரு. வெ. நாராயணன் அவர்கள் எழுதிய இந்த நூலுக்கு அரசு மானியம் தந்து, வெளியிட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே. கலைத் துறையைச் சேர்ந்தவர்களைப் பற்றி இதுவரையில் பாடப் புத்தகங்கள் வந்ததில்லை. இந்தப் புத்தகம் கலைத் துறையைச் சேர்ந்த கலைவாணரைப்பற்றி இருப்பதால், பள்ளிகளில், கல்லூரிகளில் பாடப் புத்தகமாக வைக்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, கலைவாணர் அவர்கள் நாட்டுக்குத் தந்து சென்றிருக்கிற அரிய கொள்கைகளைப் பற்றி எப்படி பாடப் புத்தகங்களில், எந்த இடத்தில் கொண்டு வருவது என்று அரசு ஆராய்ந்து வருகிறது.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, திராவிடப் பரம்பரையைச் சேர்ந்த கலியூர் செல்வராஜ் அவர்கள் கலைவாணர் பற்றி ஒரு தொகுப்பு நூலை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே முழுமையான விவரங்கள் இருக்கின்றன. இதய தெய்வம் டாக்டர் புரட்சிக் தலைவர் அவர்கள் அதற்கு வாழ்த்துரை வழங்கி இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதைப் போன்ற புத்தகங்களை வாங்கி, பள்ளிகளுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் நூல் நிலையங்களுக்கும் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, சென்ற வாரம் உயர்திரு. கலியூர் செல்வராஜ் அவர்கள் கலைவாணரைப் பற்றி எழுதி வெளியிட்டுள்ள நூலை அனைத்து நூலகங்களிலும் போட வேண்டும் என்று அரசு ஆணையிட்டிருக்கிறது; அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயல், இசை, நாடக மன்றம் கலைவாணர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை வெளியிட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் புத்தகத்தை அனைத்து நூலகங்களும் வாங்க வேண்டுமென்று அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, திரு. வேலாயுதம் என்பவர் எழுதிய ''கலைவாணர்-தமிழர்களின் ஆய்வு'' என்ற நூலும், திரு. வெ. நாராயணன் அவர்கள் எழுதிய கலைவாணர் பற்றிய நூலும், அவரே 'கலைவாணர் வாழ்வில்'. என்று வெளியிட்டுள்ள நூலும், 'கலைவாணர் என். எஸ். கே. என்று கலியூர் செல்வராஜ் அவர்கள் எழுதிய நூலும் அனைத்து நூலகங்களாலும் வாங்கப்பட வேண்டுமென்று அரசு ஆணை யிட்டிருக்கிறது.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : தலைவரவர்களே, கலைவாணர் அவர்கள் பல புரட்சிகரமான கருத்துக்களை வில்லுப் பாட்டு மூலம் தமிழக மக்களிடையே பரப்பி வந்தார்கள் அந்த வில்லுப்பாட்டை வைத்து, மத்திய மாநில அரசுகள் செய்கின்ற நல்ல காரியங்களை, குறிப்பாக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பரப்புகின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை அரசு ஆராயும்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைத்தல்.

69*—(வினா எண் 8151) திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆலங்குடியில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் ஒன்றினை அமைக்கும் செயற்குறிப்பு பற்றி உயர்நீதிமன்றப் பதிவாளருடன் அரசு கலந்து ஆலோசித்ததில் அங்கு ஒரு இரண்டாம் வகுப்பு குற்றவியல்